


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.09.2024) சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கு நேரில் சென்று, அங்கு பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இல்லம்தோறும் இளைஞரணி நிகழ்வின் மூலம் முதல் கட்டமாக சேர்க்கப்பட்ட 20 ஆயிரம் உறுப்பினர்கள் அடங்கிய இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை நிரப்பப்பட்ட படிவங்களை கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் முன்னாள் பால்வளத் துறை அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. சுரேஷ்குமார் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.09.2024) சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கு நேரில் சென்று, அங்கு பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர், முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்கு மேற்கொண்ட அரசு முறைப் பயணங்கள் குறித்து வைக்கப்பட்டிருந்த புகைப்படப் பலகையில் "வாழ்த்துகள். 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு நமது இலக்கு" என்று எழுதி கையொப்பமிட்டார்.

# 50 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிட இலக்கு!

## தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனப் பணியாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை!

**சென்னை,செ.ப்.27-**

**50 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிட தமிழ்நாடு தொழில் வழிகாட்டு நிறுவன பணியாளர்களுக்கு இலக்கு நிர்ணயித்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

சென்னையிலுள்ள தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கு நேரில் சென்று, அங்கு பணிபுரியும் பணியாளர்களை சந்தித்துப் பேசியது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**அரசு நிர்வாகத்தில் உள்ள இளம் ரத்தங்களான தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் பணியாளர்களைச் சந்தித்தேன்.**

**இவர்களுடைய சிறப்பான பணியினால், நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஈர்த்த 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளில் 60 விழுக்காடு பணிகள் நிறைவேறியிருக்கிறது; மீதமுள்ள 40 விழுக்காடு பணிகள் நிறைவேறுவதற்கான பணிகளை விரைந்து செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.**

**50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிட வேண்டும் என அவர்களுக்கு இலக்கு நிர்ணயித்துள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரத்தில் 28ஆம் தேதி நடைபெற உள்ள தி.மு.க பவள விழா கூட்டத்திற்கான ஏற்பாடுகளை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார். உடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாநகர மேயர் மகாலட்சுமி யுவராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், பம்மல் வடக்குப் பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## நுங்கம்பாக்கம் – காம்தார் நகர் மெயின் ரோட்டிற்கு

# "எஸ்.பி.பாலசுப்பிரமணியம் சாலை" என பெயர் சூட்டப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, செப். 27 -**

**திரை இசைப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம், காம்தார் நகர் மெயின் ரோட்டிற்கு "எஸ்.பி. பாலசுப்பிரமணியம் சாலை" எனப் பெயர் சூட்டப்படும் என்று - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

பல்வேறு மொழிகளில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, தன்னுடைய அமுதக் குரலால் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக இசை மழை பொழிந்ததோடு, பல படங்களுக்கு இசையமைத்தும், திரைப்படங்களில் நடித்தும், பல் துறை வித்தகராக விளங்கியவரும், ஒன்றிய அரசின் பத்மஸ்ரீ, பத்ம விபூஷன் விருதுகள் பெற்றவரும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பிற்குரியவருமான எஸ்.பி.பாலசுப்பிரமணியம் அவர்கள், கடந்த 25-9-2020 அன்று இதே நாளன்று நம்மை விட்டுப் பிரிந்தார். காலம் அவரைப் பிரித்தாலும், நம் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பெற்றவர் அவர்.

அன்னார் தமிழ்த் திரையுலகிற்கு ஆற்றிய சேவையைப் போற்றும் வகையிலும், அவரின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையிலும், அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம் காம்தார் நகர் மெயின் ரோட்டிற்கு "எஸ்.பி.பாலசுப்பிரமணியம் சாலை" எனப் பெயரிடப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# செப்டம்பர் 27ஆம் நாள் சி.பா. ஆதித்தனார் பிறந்த நாள்!

## திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்!

*சென்னை, செப். 27 -*

*சி.பா. ஆதித்தனார் அவர்களின் 120வது பிறந்த நாள் இன்று (27.9.2024) கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், இன்று (27.9.2024) காலை 9.30 மணியளவில் சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலை அருகே வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.*

*சி.பா.ஆதித்தனார் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகில் உள்ள காயாமொழி என்கிற கிராமத்தில் 1905 ஆம் ஆண்டு பிறந்தவர். செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்து வெளிநாட்டில் சட்டப்படிப்பு முடித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். கல்லூரியில் படிக்கின்ற நாள் களிலேயே சிறு தொழில்கள் செய்து முன்னேறுவது குறித்துப் பல கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார்.*

*1942ஆம் ஆண்டு முதன் முதலாக, 'மதுரை முரசு' என்ற வாரம் இருமுறை இதழையும், பின்னர் 'தமிழன்' என்ற வார இதழையும் தொடங்கினார். யாருக்கும் அஞ்சாமல் உண்மை செய்திகளை வெளியிட வேண்டும் என்கிற கொள்கைப் பிடிப்பின் காரணமாக, இவரது பத்திரிகையை ஆங்கில அரசு தடை செய்தும் கூட, தன் கொள்கையை மாற்றிக் கொள்ளாதவர் இவர்.*

*1942ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மதுரையில் 'தினத்தந்தி' நாளிதழை தொடங்கி வெளியிட்டார். தொடர்ந்து, 'மாலை மலர்' என்ற மாலைப் பத்திரிகையையும் 'ராணி' என்ற வார இதழையும் தொடங்கினார். 1947ஆம் ஆண்டில் 'தினத்தாள்' பத்திரிகையும், அடுத்த ஆண்டில் 'தினத் தூது' பத்திரிகையையும் தொடங்கினார். பத்திரிகைகளில் மக்கள் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் தமிழ்ச் சொற்கள், சிறிய வாக்கியங்கள், கவர்ந்திழுக்கும் தலைப்புகள், கருத்துப் படங்கள் உள்ளிட்ட உத்திகளைக் கையாண்டு தமிழ்ப் பத்திரிகை உலகில் புதுமைகளைப் புகுத்தினார்.*

*இவரது நாளிதழில் ஏராளமான படங்களுடன் செய்திகளை வெளியிட்டு தமிழ் இதழியல் துறையில் முத்திரைகள் பதித்தார். 1942ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டப்பேரவை மேலவை உறுப்பினராகவும், 1957ஆம் ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டு வரை சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றினார்.*

*1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த காலத்தில் சட்டமன்றப் பேரவைத் தலைவராகப் பணியாற்றினார். அப்போது, சட்டப் பேரவை விதிகள் ஆங்கிலத்தில் இருப்பது பொருத்தமாக இருக்காது என்பதை அறிந்து தமிழில் மொழிபெயர்த்தார்.*

*பேரறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின் 1969ல் கூட்டுறவு மற்றும் விவசாயத் துறை அமைச்சராகவும் திறம்படப் பணியாற்றினார்.*

*சி.பா.ஆதித்தனார் அவர்கள் ஏடு நடத்துவோர்க்கும், எழுத்தாளர்களுக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில், அன்னாரின் பிறந்த நாளான செப்டம்பர் 27ஆம் நாள் அரசு விழாவாகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.*

*இந்நிகழ்ச்சியில் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.*




தமிழ் இதழியலின் முன்னோடி சி.பா.ஆதித்தனார் அவர்களது பிறந்தநாளில் தமிழ்ச் சமுதாயத்துக்காக அவர் ஆற்றிய பணிகளையும், தமிழ் இதழியலுக்கு அவர் அளித்த பங்களிப்பையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன் !

–மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழர் தந்தை
**சி.பா.ஆதித்தனார்**
அவர்களின்
**120ஆவது பிறந்த நாள்**

தமிழ்நாடு அரசின் சார்பில்
தமிழர் தந்தை **சி.பா.ஆதித்தனார்**
அவர்களின் திருவுருவச் சிலைக்கு
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

| நாள்: **27.9.2024** வெள்ளிக்கிழமை | நேரம்: காலை **9.30** மணி | இடம்: எழும்பூர், சென்னை |
|---|---|---|

இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

செ.ம.தொ.இ / 986 / வரைகலை / 2024